# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

**O.S.174/2023**

**CNR.No.TNCB19000**

Date: 08.07.2025 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சரோஜினி | **வயது** | 70 |
| **த/பெ** | திம்மையன் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | சிக்கதாசம்பாளையம் | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 8th July 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகம் கேட்டு தாக்கல் செய்திருக்கிறேன் எனது தாத்தா திம்மப்ப கவுடர் சொத்தில் பாகம் கேட்டு தாக்கல் செய்திருக்கிறேன். எனது அப்பா பெயர் திருமலை கவுடர், எனது தாத்தா பெயர் திம்மப்ப கவுடர் என்பதற்கும் பிராதில் கண்டுள்ள மொத்த உறவுமுறைகளை காட்டுவதற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும் உரிமை உள்ளது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் திம்மப்ப கவுடர் எப்போது இறந்தார் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தை திம்மப்ப கவுடர் சுயமாக சம்பாதித்து பெற்றாரா அல்லது பெற்றோரிடமிருந்து வந்ததா என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட திம்மப்ப கவுடருக்கும் சரி தாவாசொத்திற்கும் சரி எனக்கு தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 1967 ம் ஆண்டு காலமாகிவிட்டார் என்பதற்கும் அவருக்கு நான் ஒரு வாரிசு என்பதற்கும் எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பிராதில் தாக்கல் செய்துள்ள பட்டா ஆவணத்தின்படி தாவா சொத்து முழுவதும் டி.டி.சுப்பையன் என்பவரது பெயரில் தனிப்பட்டா உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் கூட்டுசுவாதீனத்தில் இருப்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா

சொத்து தற்போது என்ன நிலையில் உள்ளது என்றால் எதுவும் இல்லை. தாவா சொத்தை எப்போது பார்த்தேன் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு சென்று பார்த்தேன். தாவா சொத்தில் ஒரு கான்கிரீட் கலவை மிசின் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து எத்தனை ஏக்கர் என்றால் 6 ஏக்கர் ஆகும்.

6 ஏக்கர் பூமியின் நான்கு எல்லைகள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். நான்கு முக எல்லை என்ன என்றால் ஞாபகம் இல்லை. எந்த காலத்திலும் தாவா சொத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதாலும் எந்தவித தொடர்பும் இல்லை என்பதாலும்தான் நான்குமுக எல்லை தெரியவில்லை என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL
Digitally signed by K PALANIVEL
Date: 2025.07.08 19:01:26 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.